[27th January 1970

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இதே மாதிரி மணல் அதிகமாக உள்ள இடம் பெரியகுளம் தாலூகாவில் போடிக்கும் தேவா ரத்திற்கும் இடையில் உள்ள ரோடில் மணல் காற்றில் வந்து மூடிக் கொள்ளும். அங்கே மரங்களை வைத்து பயிர் செய்து மணல் வராமல் தற்போது தடுத்திருக்கிறார்கள். ரோடில், தார் போடுவதால், மணல் உருண்டு போய்விடுகிறது. மரங்களை வைப்பதால், மணல் தடுக்கப்படுகிறது. இந்த மாநிலத்திலேயே மதுரை ஜில்லாவில் அது நடந்திருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொண்டு அதைப் பார்த்து அவ்விதம் செய்ய அரசு முயலுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போது அந்த சாலையில் தார் போடப்படுகிறது. கடற்கரையை ஒட்டி ஒரு பகுதி செல்கிறது. மணல் அதிகமாக வருகிறது. ஓரங்களில் செடிகளை வைப்பதால், மணலைத்தேக்கிக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. அதைப் பின்பற்றுகிறார்கள்.

Social Education Organisers.

***75. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—**

(*a*) the number of Social Education Organisers employed in the Panchayat Unions in the State ; and

(*b*) among them, the number of Social Education Organisers (i) who have teachers' training qualification and (ii) who do not possess the minimum S.S.L.C. pass qualification ?

சமூகக் கல்வி அமைப்பாளர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் சமூகக் கல்வி அமைப்பாளர்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்களுள் (1) ஆசிரியர் பயிற்சித் தகுதி பெற்றோர், (2) குறைந்த அளவு பள்ளியிறுதி ஆண்டுத் தேர்வுத் தகுதி பெறாதவர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) அண்டு (இ) விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இவர்களை எஸ்.இ.ஒ. என்று சொல்கிறபடியால், டி.இ.ஒ., சி.இ.ஒ., என்பது போல பெரிய அதிகாரிகள் என்ற தப்பான அபிப்பிராயம் இருக்கிறது. எஸ்.இ.ஒ. என்று சொல்லக் கூடிய பஞ்சாயத்து யூனியன் கல்வி அதிகாரிகளில் எஸ்.எஸ். எல்.சி. தாண்டாதவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை நான் அறி வேன். ஆகையால் அவர்களுக்கு எஸ்.இ.ஒ. என்ற பெரிய பெயரை மாற்றி கல்வி அலுவலர், கல்வித் தொண்டர், மேற்பார்வையாளர், சூபர் வைசர் என்பதைப் போன்று வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : பெயரால் ஏற்படுகிற மாறுபாடு அதிகமில்லை. என்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் கருத்து ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது—என்று கருதுகிறேன். இப்போது அவர் கள் எஸ்.இ.ஒ. என்று அழைக்கப்படுவதில்லை. இ.ஒ. (எஜுகேஷன்) என்று, "எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் ஃபார் எஜுகேஷன்" என்று அழைக்கப்படு கிறார்கள் இப்போது.

Separate Department at District Level for District Development Councils, Community Development Projects, etc.

***76. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to constitute a separate Department at the District level for attending to the works of Panchayats, Panchayat Unions, District Development Councils, Community Development Projects, etc ?**